உ

ஸ்ரீ முருகன் துணை

சங்க உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கை

சங்கத்தின் பெயர் : **முருகன் திருவருட் சங்கம்**

சங்கத்தின் நோக்கங்கள் :

சங்கத்தின் செயல்பாடு : தமிழக அரசால் நியமிக்கப்பட்ட 'சங்கப் பதிவாளர்' ஆணைக்கும் விதிமுறைகளுக்கும் பொதுவாக உட்படும். சங்கம் தனக்கென ஏற்படுத்தியுள்ள பின்னே குறிக்கப்பட்டுள்ள விரிவான விதிகளைக் கடைப்பிடித்துச் செயல்படும்.

உறுப்பினர்களை சேர்த்தல் :

இந்த முருகன் திருவருட் சங்கத்தின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் நன்மைக்கும் பாடுபடும் எண்ணம் கொண்ட விருப்பம் உடைய இப்பகுதியிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் உறுப்பினராக சேர்க்கப்படுவார்கள். உறுப்பினராகச் சேர விரும்புவோர் தனது விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சந்தா தொகையினை அலுவலக நேரத்தில் கொடுத்து உறுப்பினராக சேர்த்து கொள்ளலாம். விண்ணப்பத்தை பரிசீலித்து உறுப்பினராக சேர்த்துக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகக்குழுவினுடைய முடிவே இறுதியானதாகும்.

சந்தா

ஒவ்வொரு உறுப்பினரும் ஆண்டு சந்தாவாக ரூ. 200- செலுத்த வேண்டும். ஓர் ஆண்டு என்பது ஆங்கில மாதம் ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரையாகும். ஒவ்வொரு ஆண்டும் ஆங்கில மாதம் ஜூனுக்குள் கண்டிப்பாக சங்க பொருளாளரிடம் செலுத்த வேண்டும்.

சங்க கூட்டம்

ஒவ்வொரு ஆண்டும் ஒரு பொதுக்குழு கூட்டம் நடைபெறும். உறுப்பினர் அனைவரும் கண்டிப்பா கலந்து கொள்ளவும். மிக முக்கியமான நிகழ்ச்சிகள், முடிவுகளுக்கு மட்டுமே சங்க உறுப்பினர்களக்கு குறுந்தகவல் அனுப்பப்படும். உறுப்பினர்கள் தாங்கள் கலந்து கொள்ள முடியாதவகையில் ஏதேனும் சொந்த காரணங்கள் இருந்தால் கண்டிப்பாக தலைவர் அல்லது பொருளாளரிடமோ தகவல் தெரிவிக்க வேண்டும்.

இதை தவிர ஆண்டிற்கு 3 செயற்குழு கூட்டம் நடைபெறும். செயற்குழு உறுப்பினர்கள் இக்கூட்டத்திற்கு தவறாமல் கலந்து கொண்டு தீர்மானங்கள் கொண்டு வருவதற்கும் குழுவின் முன்னேற்றத்திற்கான சில கருத்துக்களை வழங்கலாம்.

உறுப்பினர்கள் கடமைகள் மற்றும் உரிமைகள்:

1) சங்கத்தின் குறிக்கோளை நிறைவேற்ற ஒவ்வொரு உறுப்பினரும் பணியாற்ற வேண்டும். சந்தாவினை ஒழுங்காக உரிய நேரத்தில் செலுத்துதல் வேண்டும். சங்கத்தின் மற்ற உறுப்பினர்களை தனது தோழனாக பாவித்து வருதல் வேண்டும். சங்கம் சட்டதிட்டங்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

2) உறுப்பினர்கள் தங்கள் நிர்வாகக்குழு, செயற்குழுவை தேர்ந்தெடுக்கவும், பொதுக்குழு கூட்டங்களில் கலந்து கொண்டு சில தீர்மானங்களை கொண்டு வருவதற்கும் குழுவின் முன்னேற்றத்திற்கான சில கருத்துக்களை வழங்கவும் உரிமையுடையவர்கள் ஆவர்.

சங்கத்தின் நடவடிக்கைகள்

இந்தச் சங்கம் சந்தா, நன்கொடை மூலம் இதன் நிதியைப் பெருக்கும். இதன் நிர்வாகக் குழுவின் முடிவின்படி சங்க குறிக்கோள்களை நிறைவேற்றப் பயன்படுத்த வேண்டும்

சங்கத்தின் நிதி

1) உறுப்பினர் நுழைவுக் கட்டணம், உறுப்பினர் சந்தா கட்டணம், கட்டிடம் மற்றும் குழு சொத்துக்கள் மூலம் கிடைக்கும் வருமானம், நன்கொடைகள், கல்வி நிதி, மூலதனத்திலிருந்து வரக்கூடிய வட்டி, ஆண்டு உறுப்பினர்களால் செலுத்தப்படும். சந்தாதொகை ரூ. 200 குறைந்த நன்கொடைகளும் இதர வசூல்கள் முதலியவை ஆகும்.

2) சங்கத்தின் நிதி, செயற்குழுவினர் அவ்வப்போது தீர்மானிக்கிறபடி அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தி வைக்கப்படும்.

3) சங்கத்தின் ஸ்தாவர சங்கம் சொத்துக்களும், பணமும், மன்றத்தின் பெயரிலேயே இருக்கும். செயற்குழுவே இவற்றின் பொறுப்புகளை ஏற்று நடத்தும்.

4) நிதி நிர்வாகப்பொறுப்பு கீழ்கண்டவர்களால் ஏற்று நடத்தப்பெறும். 1. செயலாளர், 2. பொருளாளர், 3. இணை செயலாளர் வங்கிக்கணக்குகளை செயலாளருடன் பொருளாளரோ அல்லது மேற்கொண்டு வங்கி சார்ந்த அனைத்து ஆவணங்களிலும் கையொப்பமிடுவார்கள்.

துணை விதிமுறைகள்

சங்கத்தின் பெயர்	:	முருகன் திருவருட் சங்கம்
விலாசம்	:	ப.எண். 50, பு.எண். 101, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

போன் : 28544713

பதிவக வரம்பு எல்லை : சென்னை - 5

துவங்கிய நாள் : 26.06.1954

சங்கத்தின் நோக்கங்கள் :

சங்கத்தின் செயல்பாடு : தமிழக அரசால் நியமிக்கப்பட்ட 'சங்கப் பதிவாளர்' ஆணைக்கும் விதிமுறைகளுக்கும் பொதுவாக உட்படும். சங்கம் தனக்கென ஏற்படுத்தியுள்ள பின்னனே குறிக்கப்பட்டுள்ள விரிவான விதிகளைக் கடைபிடித்துச் செயல்படும்.

மேலும் இன்னும் பல பொது நல நற்பணிகளுக்காகவும் இந்த சங்கம் பாடுபடும்.

எதிர்காலத்தில் செய்ய வேண்டிய நோக்கங்கள் குறித்த நடவடிக்கைகள் :

1. தமிழ்நாடு சங்கப்பதிவு சட்டம் விதி எண் 3, பிரிவு எண் 3 உட்பிரிவு (1)ன் படி பகுதி 2க்குட்பட்டு மக்கள் நலவாழ்வு, கைத்தொழில்கள், குடிசைத் தொழில்கள், சமூகப்பணி, கல்வி, இலக்கியம், அறிவியல், அறநிலையம், சமூகச்சீர்திருத்தம், கலை, உடற்பயிற்சிகள், விளையாட்டுப் போட்டிகள், (மனையபக விளையாட்டுகள் உட்பட) பொழுதுபோக்கு, பண்பாட்டு நிகழ்ச்சிகள், பயனுள்ள அறிவை விரிவாக்கப் பாடுபடுதல் போன்ற நோக்கங்களுக்காக இந்தச் சங்கம் பாடுபடும்.

2. மாநிலத்திற்கு சட்டம் இயற்றுவதற்கு அதிகாரம் கொண்டுள்ள மாநில சட்டமன்றம் குறித்துக் கொடுக்கும் அத்தகைய மற்றும் பயனுள்ள குறிக்கோளை மேம்படுத்தும் நோக்கங்களுக்காக இந்தச் சங்கம் பாடுபடும்.

3. மேற்படி நோக்கங்கள் அல்லாமல் இன்னும் எதிர்காலத்தில் செய்ய வேண்டிய நற்பணிகளுக்காக இந்தச் சங்கம் பாடுபடும்.

வழக்கு :

சங்கத்தின் சார்பாக வழக்கு தொடுக்க வேண்டுமென்றாலும் அல்லது பிறர் சங்கத்தின் மீது வழக்கு தொடுத்தாலோ சங்கத்தின் தலைவரின் பெயரிலேயே வழக்குகள் மேற்கொள்ளப்படும்.

நிர்வாக குறிப்பு ஆணை :

சங்கத்தின் அன்றாட நிர்வாகக் குறிப்பு ஆணை பிறப்பிக்க தலைவருக்கு அதிகாரம், செயற்குழு ஒப்புதலோடு அளிக்கப்படுகிறது. சங்கத்தின் பெயர் பலகை தமிழில் இருக்க வேண்டும்.

உறுப்பினர்களை சேர்த்தல் :

இந்த முருகன் திருவருட் சங்கத்தின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் நன்மைக்கும் பாடுபடும் எண்ணம் கொண்ட விருப்பம் உடைய இப்பகுதியிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் உறுணுப்பினராக சேர்க்கப்படுவார்கள். உறுப்பினராகச் சேர விரும்புவோர் தனது விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சந்தா தொகையினை அலுவலக நேரத்தில் கொடுத்து உறுப்பினராக சேர்த்து கொள்ளலாம். விண்ணப்பத்தை பரிசீலித்து உறுப்பினராக சேர்த்துக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகக்குழுவினுடைய முடிவே இறுதியானதாகும்.

சந்தா

ஒவ்வொரு உறுப்பினரும் ஆண்டு சந்தாவாக ரூ. 200 செலுத்த வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ஆங்கில மாதம் ஜுன் 30க்குள் கண்டிப்பாக சங்க பொறுப்பாளர்களிடம் செலுத்த வேண்டும்.

நுழைவுக் கட்டணம் :

18 வயது நிரம்பிய முருகனடியார்கள் யாவரும் இந்த முருகன் திருவருட் சங்கத்தில் (முஏமு)வில் உறுப்பினராக தகுதி பெற்றவர்கள். ஆரம்ப உறுப்பினர் நுழைவு கட்டணம் ரூ. 50- செலுத்த வேண்டும்.

அ) **உறுப்பினர் :** 18 வயது நிரம்பிய முருகனடியார்கள் நுழைவுக் கட்டணம் ரூ. 10- (புதிதாக சேரும் பொழுது மட்டும்)

ஆ) 25 ஆண்டுகளாக உறுப்பினராக தொண்டு செய்பவர் கௌரவ உறுப்பினர்களாக செயற்குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்படுவர் அப்படி அங்கீகரிக்கப்பட்ட கௌரவ உறுப்பினர்கள் ஆண்டு சந்தா செலுத்த வேண்டாம்.

2) மேற்படி உறுப்பினராகச் சேரும் விரும்பும் நபர் விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாய் குறிப்பிட வேண்டும். அவை சரியானவை தான் என்றும் உண்மையானவைதான் என்றும் உறுதிமொழி கொடுக்க வேண்டும்.

3) செயலாளர் வரும் விண்ணப்பங்களை அடுத்து வரும் செயற்குழு கூட்டத்தில் அதன் பரிசீலனைக்கு வைப்பார். செயற்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே பொதுக்குழு உறுப்பினர்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். விண்ணப்பத்தை செயற்குழு ஏற்றுக் கொள்ளவில்லையானால் கூட்டம் முடிந்த 10 தினங்களுக்குள் செயற்குழுவின் தீர்மானத்துடன் விண்ணப்பித்தவருக்கு அவர் செலுத்திய சந்தா திரும்ப தரப்படும்.

4) எந்த ஒரு விண்ணப்பத்தையும் எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்க செயற்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

5) ஆண்டு சந்தா தொகையை முன்பணமாக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 30ம் தேதிக்கு முன் செலுத்தியிருக்க வேண்டும்.

உறுப்பினர்கள் நீக்கம்:

1) சந்தா தொகை செலுத்தப்பட வேண்டிய தேதிக்குப் பின்னும் மூன்று மாதங்களுக்கு மேல் செலுத்தப்படாமல் இருந்தால் மேற்படி நபர் தமது உறுப்பினர் தகுதியை இழந்தவராக கருதப்படுவார்.

2) சங்கத்தின் குறிக்கோளுக்கும், செயல்பாட்டுக்கும் விரோதமாக செயல்படும் நபர் யாராக இருந்தாலும் செயற்குழு பரிந்துரைப்படி உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கப்படுவார்.

உறுப்பினர்கள் கடமைகள் மற்றும் உரிமைகள்:

1) சங்கத்தின் குறிக்கோளை நிறைவேற்ற ஒவ்வொரு உறுப்பினரும் பணியாற்ற வேண்டும். சந்தாவினை ஒழுங்காக உரிய நேரத்தில் செலுத்துதல் வேண்டும். சங்கத்தின் மற்ற உறுப்பினர்களை தனது தோழனாக பாவித்து வருதல் வேண்டும். சங்கம் சட்டதிட்டங்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

2) உறுப்பினர்கள் தங்கள் நிர்வாகக்குழு, செயற்குழுவை தேர்ந்தெடுக்கவும், பொதுக்குழு கூட்டங்களில் கலந்து கொண்டு சில தீர்மானங்களை கொண்டு வருவதற்கும் குழுவின் முன்னேற்றத்திற்கான சில கருத்துக்களை வழங்கவும் உரிமையுடையவர்கள் ஆவர்.

சங்கத்தின் நடவடிக்கைகள்

இந்தச் சங்கம் சந்தா, நன்கொடை மூலம் இதன் நிதியைப் பெருக்கும். இதன் நிர்வாகக் குழுவின் முடிவின்படி சங்க குறிக்கோள்களை நிறைவேற்றப் பயன்படுத்த வேண்டும்.

நிர்வாகக்குழுவும் செயற்குழுவும் :

1) நிர்வாகக்குழு:- 1 தலைவர், துணைத்தலைவர்கள், செயலாளர், பொருளாளர் மற்றும் துணைச் செயலாளர்கள் ஆகியவர்கள் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆவர். இவர்கள் சங்கத்தின் அன்றாட அலுவல்களைக் கவனித்துக் கொள்வார்கள்.

2) செயற்குழு:- ஆண்டுக்கு ஒரு முறை ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் 6 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்கள் முறையே உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் சங்கத்தில் குறைந்த அளவு இரண்டு வருடமாவது

உறுப்பினராக இருந்திருக்க வேண்டும். நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அனைவரும் பதவியின் காபரணமாக செயற்குழு உறுப்பினர் ஆவார்கள். நிரப்பப்படாத இடங்களுக்கு செயற்குழு தேவைக்கேற்ப சங்க உறுப்பினர்களிலிருந்து நியமித்துக் கொள்ளும்.

3) செயற்குழு உறுப்பினர்கள், குழுவின் நிதிப்பொறுப்பை ஏற்பதோடு குழுவிற்கு சேர வேண்டிய பணத்தை வசூல் செய்வதற்கும், அவைகளை சரியானபடி முதலீடு செய்வதற்கும் பொறுப்பு ஏற்பர். குழுவின் அனைத்து வரவு செலவுகளையும் நிர்வகித்து கணக்குகளை அங்கீகரிப்பர்.

4) செயற்குழு உறுப்பினர் தொடர்ந்து ஐந்து கூட்டங்களுக்கு வராமல் இருந்தால் தகுந்த காரணத்தை எழுத்து மூலம் தலைவருக்கு அறிவிக்காத பட்சத்தில் அந்த நபருக்கு பதிலாக வேறு ஒரு நபரை செயற்குழுவிற்கு தலைவர் நியமனம் செய்வார்.

செயற்குழு கூட்டங்கள் :

1) செயற்குழு கூட்டங்கள் நான்கு மாதங்களுக்கு ஒருமுறையோ அல்லது அவசியப்படும் போதோ கூட்டப்பட வேண்டும். கூட்டத்தில் குறைந்த அளவு (ஏழு) செயற்குழு அங்கத்தினர்களாவது கலந்து கொள்ள வேண்டும். செயற்குழு கூட்டத்திற்கு தலைவர் தலைமை வகிப்பார். அவர் இல்லாத போது துணைத்தலைவர்களில் ஒருவர் தலைமை வகிப்பார். தலைவர், துணைத்தலைவர் ஆகிய இருவரும் இல்லாதபோது ஏனைய உறுப்பினர்களுள் மூத்த உறுப்பினர் ஒருவர் தலைமை வகிப்பதற்கு தகுதியுடையவர் ஆவார்.

2) உறுப்பினர்களுள் ஒருவர் கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வருவதாக இருந்தாலும், அல்லது ஏதாவது ஒரு பொருளின்மீது விவாதிப்பதாக இருந்தாலும் அவர் குழுவின் செயலாளருக்கு அவரது எண்ணத்தை கூட்டம் கூட்டுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

இடைக்கால நியமனம்

1) மேற்படி விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் - தன்னுடைய பதவிக்காலம் முடியும் முன்னரே பதவியிலிருந்து விலகினாலோ - விலக்கப்பட்டாலோ, இயற்கை எய்தினாலோ, துணைத்தலைவர்களில் ஒருவர் செயற்குழுவின் அங்கீகாரத்துடன் தலைவர் பதவியை அடுத்த பொதுக்குழு கூட்டம் வரை வகிப்பார் அல்லது செயற்குழு உறுப்பினர்களுள் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் அடுத்த பொதுக்குழு கூட்டம் வரை தலைவராகப் பதவி வகிப்பார்.

2) துணைத்தலைவர்கள் தன்னுடைய பதவிக்காலம் முடியும் முன்னரே பதவியிலிருந்து விலகினாலோ - விலக்கப்பட்டாலோ, இயற்கை எய்தினாலோ, செயற்குழு உறுப்பினர்களுள்

ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் அடுத்த பொதுக்குழு கூட்டம் வரை துணைத்தலைவராகப் பதவி வகிப்பார்.

3) செயலாளர் தன்னுடைய பதவிக்காலம் முடியும் முன்னரே பதவியிலிருந்து விலகினாலோ - விலக்கப்பட்டாலோ, இயற்கை எய்தினாலோ, செயற்குழு உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் அடுத்த பொதுக்குழு கூட்டம் வரை செயலாளராகப் பதவி வகிப்பார்.

4) துணைச் செயலாளர் தன்னுடைய பதவிக்காலம் முடியும் முன்னரே பதவியிலிருந்து விலகினாலோ - விலக்கப்பட்டாலோ, இயற்கை எய்தினாலோ, செயற்குழு உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் அடுத்த பொதுக்குழு கூட்டம் வரை துணைச் செயலாளராகப் பதவி வகிப்பார்.

5) பொருளாளர் தன்னுடைய பதவிக்காலம் முடியும் முன்னரே பதவியிலிருந்து விலகினாலோ - விலக்கப்பட்டாலோ, இயற்கை எய்தினாலோ, செயற்குழு உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் அடுத்த பொதுக்குழு கூட்டம் வரை பொருளாளராகப் பதவி வகிப்பார்.

6) செயற்குழு உறுப்பினர்கள் தன்ஙனடைய பதவிக்காலம் முடியும் முன்னரே பதவியிலிருந்து விலகினாலோ - விலக்கப்பட்டாலோ, இயற்கை எய்தினாலோ அவர்களுக்கு மாற்றாக தலைவர் செயற்குழுவின் அங்கீகாரத்துடன் அப்பதவிக்கு பொதுக்குழு உறுப்பினர்களுள் இருந்து ஒருவரை செயற்குழு உறுப்பினராக நியமிப்பார்.

நிர்வாகிகளின் பணிகள்

அ) தலைவர்

1) குழுவின் முதன்மையானவர் குழுவை வழிநடத்திச் செல்பவர். சங்கத்தின் பெருமைகளை கட்டிக்காத்து அடியார்கள் நலனுக்கும் குழுவின் நல்ல பெயரை நிலைநாட்டவும் பாடுபடுவார்.

2) நிர்வாகக்குழு, செயற்குழு, பொதுக்குழு கூட்டங்களுக்கு தலைமை ஏற்று நடத்துவார்.

3) நிர்வாகக்குழு, செயற்குழு, பொதுக்குழு கூட்டங்களில் அமைதியான கூட்ட நடவடிக்கைகளுக்கு ஊறு விளைவிக்கும் வண்ணம் நடந்து கொள்ளும் நபர் அல்லது நபர்களை கட்டுப்படுத்தவும், தேவைப்பட்டால் பெரும்பான்மையான செயற்குழு உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் அவர்களை சபையிலிருந்து வெளியேற்றவும், கூட்டத்தை ஒத்திவைக்கவோ, அல்லது மறுதேதிக்கு கூட்டத்தை தள்ளி வைக்கவோ தலைவர் உரிமை உடையவர் ஆகிறார்.

4) அவசர காரணங்களுக்காக நிர்வாகக்குழு அல்லது செயற்குழு அல்லது பொதுக்குழு கூட்டத்தை செயலாளர் சுற்றறிக்கை மூலமாக கூட்டத்தைக் கூட்ட அதிகாரம் உடையவராகிறார்.

5) நிர்வாகக்குழு, செயற்குழு மற்றும் பொதுக்குழுவில் ஓட்டு எடுத்து தீர்மானங்களில் வெற்றி தோல்வி இரண்டும் சமமான நிலையில் தலைவரின் சிறப்பு ஓட்டு எதற்கு சாதகமாக உள்ளதோ அதுவே வெற்றி பெற்றதாகும்.

ஆ) துணைத் தலைவர்

1) தலைவருக்கு உதவியாக இருந்து பணிபுரிவார். தலைவர் விடுப்பில் இருக்கும்போது கூட்டத்தை தலைமையேற்று நடத்துவார்.

இ) செயலாளர்

1) சங்க செயல்பாட்டின் முக்கிய பொறுப்பாளர் ஆவார். இவரே குழுவின் அனைத்து நிர்வாகத்திற்கும் மற்றும் அனைத்து கடித போக்குவரத்துக்கும் பொறுப்புடையவர்.

2) சங்கத்தின் வரவு செலவு கணக்குகளை முறையாக எழுதி வைத்து இருத்தல்.

3) சங்கத்தின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை பராமரித்தல்.

4) சங்கத்தின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களையும் சரியாக பராமரித்து இருத்தல்.

5) சங்கத்தின் நிர்வாகத்திற்கும் தேவையான ஊழியர்களை தேவைக்கேற்றவாறு தலைவரின் ஒப்புதலோடு நியமித்து நிர்வகித்தல்.

6) நிர்வாகக்குழு, செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டங்களை நடத்துவதற்கு தேவையான சுற்றறிக்கைகளை தயாரித்து தலைவர் ஒப்புதலுடன் உரிய காலத்தில் அனுப்புதல்.

7) சங்கம் சம்பந்தப்பட்ட அனைத்து அரசு மற்றும் சட்ட சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் கையொப்பமடிடும் அதிகாரம் உடையவர் ஆவார்.

8) சங்க நிர்வாகக்குழு, செயற்குழு, பொதுக்குழு மற்றும் சிறப்புப் பொதுக்குழு கூட்டங்களில் நிறைவேற்றப்படும். தீர்மானங்களை அதற்கான பதிவேட்டில் அவ்வப்போது பதிவு செய்து அடுத்த கூட்டத்தில் படிக்கப் பெற்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின் கூட்டத்தலைவரின் கையொப்பம் பெறுதல். இந்த தீர்மானங்கள் குறித்த தொடர் நடவடிக்கைகள் அடுத்து அவைகளை நிறைவேற்றுதலும், ஒவ்வொரு சங்கக் கூட்டத்தில் அறிவித்தலும்.

ஈ) பொருளாளர்

1) பொருளாளர் குழுவிற்கு சேர வேண்டிய பணத்தை உரிய காலத்தில் வசூல் செய்து, சங்கம் கொடுக்க வேண்டிய, செயற்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களுக்கு பணம் கொடுக்க வேண்டும். அதற்கான கணக்குகளை முறையாக எழுதி வர வேண்டும்.

2) சில்லறை செலவுகளுக்காக அதிகபட்சமாக ரூ. 10,000 (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வரை குழுவில் கையிருப்பு வைத்திருக்கலாம்.

3) நிர்வாகக்குழுவின் அங்கீகாரத்துடன் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்களுக்காகவோ ரூ. 10,000 வரை நிதியுதவி செய்து இந்த செலவை அடுத்து வரும் செயற்குழு கூட்டத்தில் தெரியப்படுத்துதல்.

4) செயற்குழுவின் அங்கீகாரத்துடன் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட செலவினங்களுக்கோ தேவையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு ரூ. 1,00,000 (ரூபாய் ஒரு லட்சம்) வரை நிதி உதவி செய்யலாம். இந்த செலவை அடுத்து வரும் பொதுக்குழு கூட்டத்தில் தெரியப்படுத்துதல்.

5) பொதுக்குழு மற்றும் சிறப்பு பொதுக்குழுவின் அங்கீகாரத்துடன் இதுவரை இல்லாத ஏனைய அனைத்து நிதியுதவிகளையும் செய்யலாம்.

தணிக்கை மற்றும் கணக்குகள்

1) சங்கத்தின் நிதி ஆண்டு ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை உள்ள காலத்தை தனது நிதி ஆண்டாகக் கருதப்படும். சங்கநிதி ஆண்டு முடிந்தவுடன் சங்கக்கணக்குகள் தணிக்கை செய்வதற்காக தமிழ்நாடு சங்கங்களில் பதிவு சட்டம் 271975ல் சட்டம் பிரிவு எண் 16(1)ன் படி அல்லது விதிஎண். 21ன் படி தணிக்கையாளர் கையொப்பம் செய்வார்.

சங்கத்தால் பராமரிக்கப்பட்ட வேண்டிய கணக்குகள்:

1) சட்டம் விதி எண் 18ன் (2)(3)(4)(5)ன் படி பராமரிக்கப்பட்டு விதி எண் 19(1)ன் படி ஒழுங்காக எழுதப்பட வேண்டிய கணக்கு புத்தகங்கள்.

அ) ரொக்கப் பதிவேடு

தினசரி வரவு மற்றும் செலவு மற்றும் அன்றைய நாளின் முடிவில் இருப்பு விபரம் காட்டும் ரொக்கப் புத்தகம்.

ஆ) ரசீது புத்தகம்

சங்க சந்தா மற்றும் நன்கொடை பெற்றுக் கொண்ட பணவிபரத்திற்கு அளிக்க பெயர் விலாசம், நாள் பெறப்படும் தொகை, பொது செயலாளர், பொருளாளர் கையொப்பத்துடன் ஒரு செட் பற்றுச்சீட்டு டிக்கட்டை பிரதியுடன் கூடிய பற்றுச்சீட்டு ரசீது புத்தகம்.

இ) பற்றுச்சீட்டு கோப்பு

விதிஎண் 19(2)ன்படி உடனடியாக செலுத்தியவரிடம் கொடுக்க வேண்டும். சங்க செலவுகளுக்கான பற்றுச் சீட்டுகளுக்கு சங்க நிதி ஆண்டுக்கு தகுந்தாற்போல் நாள் வாரியாக வரிசை எண் அளித்து இக்கோப்பில் பேணப்பட வேண்டும். ரூ. 400க்கு மேற்பட்ட செலவுகளுக்கு பற்றுச்சீட்டில் ஒப்பிட்டு கையொப்பம் பெறுதல் வேண்டும். செலவுத் தொகை வழங்கப்பட்டவுடன் paid அல்லது தொகை பட்டுவாடா செய்யப்பட்டது என்ற முத்திரை பற்றுச்சீட்டில் இடப்பட வேண்டும்.

சங்கத்தின் நிதி

அ) சங்க நிதி ஆண்டு

வரவு செலவு கணக்கு ஆண்டு என்பது ஏப்ரல் 1 முதல் அடுத்த வருடம் மார்ச் 31 வரை ஆகும். செயற்குழு ஆடிட்டரின் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு வருடாந்திரகணக்கினை சரிபார்த்து பொதுக்குழுவிற்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

ஆ) நிதி

1) குழுவின் நிதி: உறுப்பினர் நுழைவுக் கட்டணம், உறுப்பினர் சந்தா கட்டணம், கட்டிடம் மற்றும் குழு சொத்துக்கள் மூலம் கிடைக்கும் வருமானம், நன்கொடைகள், கல்வி நிதி, மூலதனத்திலிருந்து வரக்கூடிய வட்டி, ஆண்டு உறுப்பினர்களால் செலுத்தப்படும். சந்தாதொகை ரூ. 200க்கு குறைந்த நன்கொடைகளும் இதர வசூல்கள் முதலியவை ஆகும்.

2) சங்கத்தின் நிதி, செயற்குழுவினர் அவ்வப்போது தீர்மானிக்கிறபடி அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தி வைக்கப்படும்.

3) சங்கத்தின் ஸ்தாவர சங்கம சொத்துக்களும், பணமும், மன்றத்தின் பெயரிலேயே இருக்கும். செயற்குழுவே இவற்றின் பொறுப்புகளை ஏற்று நடத்தும்.

4) நிதி நிர்வாகப்பொறுப்பு கீழ்கண்டவர்களால் ஏற்று நடத்தப்பெறும். 1 செயலாளர், 2. பொருளாளர், 3. இணைச் செயலாளர் வங்கிக்கணக்குகளை செயலாளருடன் பொருளாளரோ அல்லது தலைவரோ மேற்கொண்டு வங்கி சார்ந்த அனைத்து ஆவணங்களிலும் கையொப்பமிடுவார்கள்.

ஆண்டு பொதுக்குழு கூட்டம்

1) பொதுக்குழு என்பது அனைத்து ஆண்டு சந்தா செலுத்தும் உறுப்பினர்களும் அடங்கியது ஆகும்.

2) சங்க ஆண்டு பொதுக்குழு கூட்டம் சென்னையில் ஆண்டுக்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும். கூட்ட அறிவிப்பு சுற்றறிக்கையில் கூட்டம் கூட்ட வேண்டிய காரணம், தேதி, நேரம் தெளிவாக 21 நாட்களுக்கு முன் அனுப்பப்பட வேண்ஙடும்.

பொதுக்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய குறிக்கோள்கள்

1) சட்டம் உட்பிரிவு எண் 16(3) (A)ன்படி மன்றத்தில் கடந்த நிதியாண்டில் தணிக்கை செய்யப்பட்ட வரவு-செலவு அறிக்கை, ஐந்தொகை கணக்கு அறிக்கை மற்றும் தணிக்கையாளர் அறிக்கை மீது விவாதித்து அங்கீகாரம் செய்யப்படும்.

2) வரும் நிதியாண்டின் கணக்குகளை தணிக்கை செய்ய தணிக்கையாளர்களை நியமனம் செய்யப்படும்.

3) சென்ற நிதியாண்டின் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து ஆண்டறிக்கை தாக்கல் செய்து ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

4) வரும் நிதியாண்டிற்கான வரவு செலவு உத்தேச மதிப்பீடு செய்தல்.

5) சிறப்பு தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டிய தேவை ஏற்பாட்டால் அந்தப் பொருள் குறித்து தீர்மானம் நிறைவேற்றல்.

6) எதிர்கால சங்க முன்னேற்ற திட்டங்கள் குறித்த சாதாரண தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டி இருப்பின் அதன் விவரம்.

7) புதிய நிர்வாகக்குழு தேர்ந்தெடுத்தல் போன்ற தேவை ஏற்பட்டால் அதன் செயல்பாடு குறித்த விபரம்.

கோரம்

1) ஆண்டு பொதுக்குழு கூட்டத்திற்கு குறைந்த அளவு கோரம் 20 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

2) சந்தாபாக்கி இல்லாத ஓட்டுரிமை பெற்ற உறுப்பினர் 20 பேர் கூடியிருந்தாலன்றி அது பொதுக்குழு கூட்டமாக கருதப்படமாட்டாது.

3) ஒத்தி வைக்கப்பட்ட கூட்டம் பின்னர் செயலாளர் அறிவிக்கும் தேதியில் நடத்தப்படும்.

உ

ஸ்ரீ முருகன் துணை

சங்க அமைப்பு குறிப்பு

சங்கத்தின் பெயர் : **முருகன் திருவருட் சங்கம்**

சங்கத்தின் நோக்கங்கள் :

சங்கத்தின் செயல்பாடு : தமிழக அரசால் நியமிக்கப்பட்ட 'சங்கப் பதிவாளர்' ஆணைக்கும் விதிமுறைகளுக்கும் பொதுவாக உட்படும். சங்கம் தனக்கென ஏற்படுத்தியுள்ள பின்னே குறிக்கப்பட்டுள்ள விரிவான விதிகளைக் கடைப்பிடித்துச் செயல்படும்.